# தெளிவு

THELIVU - YOUTHS OF JAFFNA ARCHDEACONERY CHURCH OF CEYLON


"ஒருவன் எந்தளவு தன்னில் ஒன்றித்து உள்ளத்தில் தெளிவு பெற்றிருக்கி றானோ அந்த அளவு அதிகமானவற் றையும் மேலானவற்றையும் எளிதாகப் புரிந்து கொள்கிறான். ஏனென்றால் அவன் இறைவனில் இருந்து அறிவின் தெளிவைப் பெறுகிறான்."


தெளிவு 2 | ஆனி - ஆடி - 2002 | இதழ் 1


# முதல் வருட சிறப்பிதழ்

## Message from the Bishop of Colombo

*I understand the Tamil newspaper 'Thelivu' is now completing one year of publication. 'thelivu' was the brainchild of the youth Fellowship of St. Jemes' Nullur and has now been adopted as the Church newspaper of the Archdeaconery of Jaffna. I am aware that it is circulated widely throughout the Diocese of Colombo and Kurenagala.*

*I wish to congratulate the youth of the Nullur parish for their initiative and the Youth of the archdeaconery for continuing the publication of this valuable newspaper over the past Year.*

*Iwish you continued success with your ministry through 'Thelivu'*

*With Peace and Blessings.*

*Duleep de Chickera*
*Bishop of Colombo*

## யாழ் முதல்வரின் ஆசிச் செய்தி



இலங்கைத் திருச்சபையின் யாழ். பிரதேசத்தில் இருந்து வெளிவரும், தெளிவு பத்திரிகை தனது முதலாவது ஆண்டை நிறைவு செய்வதையிட்டு பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

அனேக ஆண்டுகளாக இலங்கை திருச்சபையின் யாழ். பிரதேசத்தில் இருந்துவந்த ஒரு பெரிய தேவை தெளிவு பத்திரிகையின் ஊடாக நிறைவு செய்யப்படுவதை நான் காணுகின்றேன். திருச்சபைக்கும் சமூகத்திற்கும் இடையிலான நல்லதொரு தொடர்பாடலை தெளிவு பத்திரிகை தனது செய்திகளினால் ஏற்படுத்துகின்றது.

ஓராண்டை பூர்த்தி செய்கின்ற தெளிவு பத்திரிகை தனது செய்திகளின் தரத்திலும், ஆக்கங்களிலும், வடிவமைப்பிலும் இதழுக்கு இதழ் மெருகூட்டிக் கொண்டு வருவதை காணக்கூடியதாக இருக்கின்றது. கடந்த ஒரே வருடத்தில் இவ்வாறு பெற்றுக் கொண்ட வளர்ச்சி எதிர்காலத்தில் நல்லதோர் சிறந்த பத்திரிகையாக திகழும் என்பது கண்கூடு.

இறையரசை கட்டியெழுப்பும் பணியில் தெளிவு பத்திரிகை ஒரு கருவியாக மக்கள் மத்தியில் விளங்க வேண்டும் என்றும், எவ்வித தொய்வும் இன்றி தொடர்ந்தும் வெளிவர வேண்டும் என்றும், இயேசுவின் அருள் வேண்டி ஆசி கூறுகின்றேன்.

வண. பிதா. S.P. நேசக்குமார்
யாழ். குருமுதல்வர் இலங்கைத் திருச்சபை

# விடுதலை பெற நாம் என்ன செய்ய வேண்டும்

கொழும்பு மறைமாவட்ட ஆயர்



**யாழ். நகரில் வாழுகின்ற மக்களாகிய நீங்கள் என்னிலும் பார்க்க துயருள்ள பாதையில், கடந்த பல வருடங்களாக யாத்திரை செய்வதை நான் அறிவேன். எனவே உங்கள் மத்தியில் காணப்படுகின்ற துயரத்தின் தன்மைகளை எனக்கு எட்டியவரையில் பட்டியல்ப்படுத்துகின்றேன்.**

அவை ஒடுக்குமுறையும், வன்முறையும், நீதியுள்ள சமாதானத்தின் போராட்டத்தினால் உடல்-உள மீளமுடியாத தாக்கங்கள் தொழிலற்ற நிலை, தகுதிக்கு ஏற்ற தொழில் இன்மை, விதவைகள், அநாதரவற்ற நிலையில் உள்ளவர்கள். இப்பேற்பட்ட ஒரு சில துன்பியல் நிலைகளை என்னால் அடையாளம் காணமுடிந்தது. இத்தகைய நிலையில் உள்ள மக்களுக்கு விடுதலை கொடுக்கும் காலம் யூபிலி காலம், ஆண்டவர் அருள்தரும் ஆண்டு. இன்றே வந்துள்ளது.

அருள்தரும் ஆண்டில் நான் முழக்கமிட்டு அறிவிக்க இவ்வுலகத்தில் வந்தேன் என்றார் யேசு. அருள்தரும் ஆண்டு என்பது யூபிலி வருடம் ஆகும். யூபிலி என்பது ஒவ்வொரு 50ம் வருடமுடிவிலும் கடனைப் பெற்றுக்கொண்ட மக்களுக்கு விடுதலை வழங்குவார்கள். மக்களுக்கு

(தொடர்ச்சி 3ஆம் பக்கம்)

## 63வது ஆண்டு விழா

மருதனாமட கிறிஸ்த சேவ ஆச்சிரமத்தின் 63வது ஆண்டு நிறைவு விழா 23-24.08.2002 திகதிகளில் ஆராதனைகளும், கருத்துரைகளும் ஆச்சிரம ஆவலர் களின் ஒன்று கூடல்களும் வெகு விமர்சையாக கொண்டாடப்படவுள்ளது.

# ஐக்கிய உறவுக்கு வித்திட்ட Rev.Dr.D.T. நைல்ஸ்

திருச்சபை ஒருமைப்பாடு தொடர்பாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பங்காற்றிய தலைவர்களுக்குள் Rev. D.T. நைல்ஸ் அடிகள் முக்கியமானவர். உள்நாட்டில் தனது ஆரம்ப காலத்தில் S.C.M, Y.M.C.A. . முதலிய நிறுவனங்களில் அங்கத்தவராக இருந்து அதில் பெற்றுக் கொண்ட அனுபவம் 1930களில் W.S.C.F ல் அங்கத்தவராகவும் மாணவர் பொறுப்பாளராகவும் பணியாற்றினார். வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் சபை ஐக்கிய பணிகளில் அவருக்கு உரமாக அமைந்தது என்றார்.

இவ்வாறு மருதனார்மட ஆச்சிரமத்தில் 17-07-2002 அன்று நடைபெற்ற உடுவில் மகாநாட்டில் மெதடிஸ்த திருச்சபையின் யாழ் முதல்வர் வண. கருணசேகரா அடிகளார் தலைமையில் நடைபெற்றபோது, பெருந் தலைவர்கள்

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

# உறவை மேம்படுத்துவதே கிறிஸ்தவத்தின் வெளிப்பாடு

- வண.ஜெபரெட்ணம் அடிகள் -

ரோமன் கத்தோலிக்க ஐக்கியத்தை குறித்ததான நிலை சபைகள் உறுதிபட்டு பாதுகாப்புடன் செயற்பட வேண்டுமாயின் திருச்சபை ஐக்கியம் இன்றியமையாததாகும். திருச்சபையின் பிளவு வரலாற்றிலேயே ஏற்பட்ட தொன்றாகும். குறிப்பாக 11ம் நூற்றாண்டிலும் கிழக்கு - மேற்காக பிரிந்த சபை சீர்திருத்த காலத்தில் மேற்கு சபையில் இருந்து அநேக பிரிவுகள் உருவெடுத்தன என்றார்.

இவ்வாறு மருதனாமட ஆச்சிரமத்தில் 16-07-2002 அன்று நடைபெற்ற உடுவில் மகாநாட்டில் யாழ். கிறிஸ்தவ ஒன்றியத் தலைவர் வண. A.A.போல் அடிகளாரின் தலைமையில் நடைபெற்றபோது பெருந்தலைவர்கள் மத்தியில் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி விரிவுரையாளர் வண.பிதா. ஜெபரட்ணம் அடிகளார் உரையாற்றினார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் இப்பிளவு களின் மத்தியில் ஆரம்பத்தில் தன்னிடம் இருந்து பிரிந்துபோன சபைகள் எத்தகைய நட்புறவும் கொண்டிரா திருச்சபையின் நிலையில் காலத்திற்கு காலம் மாற்றங்கள் ஏற்பட்டது. 1961ல் W.C.C யில் புதடில்லியில் நடாத்தப்பட்ட மகாநாட்டுக்கு ரோமன் கத்தோலிக்க சபை அங்கத்தவர்கள் பார்வையாளர்களாக அனுமதிக்கப்பட்டது.

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

# தனிவாழ்வு சமூகத்தில் பிரதிபலிப்பதே கிறிஸ்தவம்

- வண. பிறேமசிறி பெர்ணான்டோ -

சுயாதீன சபைகளுடனான ஒருமைப்பாடு, பெந்தேகொஸ்தே திருநாளன்று நடைபெற்ற அனுபவத்தைக் கொண்டு தூய ஆவியரின் திருமுழுக்கு அன்னிய பாஷை முதலிய கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து இச்சபைகள் செயலாற்றுகின்றன.

பவுல் கொரிந்தியருக்கு எழுதிய நிருபத்தில் 9 வரங்களை பற்றி பேசுகின்றார். அவ்வரங்களுக்கிடையில் சமத்துவமும், ஒன்றில் ஒன்று தங்கியிருக்கும் நிலை காணப்படுகின்றது. இவ்வரங்களை சொந்த உபயோகத்திற்காக பயன்படுத்தாது பிறரின் நலன் கருதி உபயோகிக்க வேண்டும். கடவுள் தமது மைந்தனை இவ்வுலகிற்கு அனுப்பினார். மைந்தனின் போதனையில் நிலைத்திருப்பவன் முடிவில்லா வாழ்வை அடைகின்றான். அவ்வாழ்வினால் பிறர்வாழ்வு பெற அழைக்கப்படுகின்றார்கள். எனவே எமது தனி அனுபவங்கள் தனி வாழ்வு சமூகத்தில் பிரதிபலிக்க வேண்டும் என்றார்.

இவ்வாறு மருதனார்மட ஆச்சிரமத்தில் 16-07-2002 அன்று நடைபெற்ற உடுவில் மகாநாட்டில் Major.P.ஜெயரட்ணசிங்கன் அவர்களின் தலைமையில் மெதடிஸ்த திருச்சபையைச் சேர்ந்த வண. பிறேமசிறி பெர்ணாண்டோ அடிகளார் உரையாற்றினார்.

# நற்செய்திக் கருத்தரங்கு

யாழ். திருச்சபை நற்செய்திக் கழகத்தின் ஆதரவில் இந்திய தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த மெய்ஞானபுரம் சுவிசேஷ ஊழியர் சகோ.நெல்லைக்குமார் அவர்கள் 11.08.02ஆம் திகதி தொடக்கம் 18.08.02 திகதி வரை எமது ஆலயங்களில் வாலிபர்களுக்கான கருத்தரங்குகளும், அருளுரைகளும், நடாத்துவர்.

# உயிர்ப்பூட்டப்பட்ட உடுவில் மகாநாடு

ஆயர் ஜெபநேசன் C.S.I

16-07-2002 அன்று மருதனாமட ஆச்சிரமத்தில் நடைபெற்ற உடுவில் மகாநாட்டில் யாழ். கிறிஸ்தவ ஒன்றியத் தலைவர் வண. A.A.போல் அடிகளாரின் தலைமையில் யாழ். தென்னிந்திய திருச்சபை ஆயர் அதி. வண. கலாநிதி சு. ஜெபநேசன் ஆண்டகை உரையாற்றும்போது,

நாம் திருச்சபை ஐக்கியம் பற்றிப் பேசினாலும் வேறு ஒரு சில காரியங்களைப் பற்றி பார்க்க அழைக்கப்படுகின்றோம். அதாவது நற்செய்தி பரம்பல், சமாதானத்திற்கும் ஒப்புரவுக்குமான பணி, அடிப்படைவாதக் கொள்கைகள், வறுமை நிலையில் சூழலியல் கொள்கை முதலிய காரணிகளில் கவனம் செலுத்த அழைக்கப் படுகின்றோம்.

1953ம் ஆண்டு முதன் முதலில் ஆரம்பித்த உடுவில் மாநாடு பின்னர் 1961இலும், 1980இலும் நடைபெற்று தற்போது மீள் உயிர்ப்பூட்டப்பட்டு இவ்வாண்டில் இது நடைபெறுகின்றது இது காலத்தின் தேவையாகின்றது.

# விடா முயற்சியே நல்ல தலைவனை உருவாக்குகிறது

C.G. ஜெயக்குமார் அடிகள்

நல்ல தலைவன் எந்த சமூகத்திலும் தானாக பிறப்பதில்லை உருவாக்கப்படுகிறான். இந்த உருவாக்கத்தை நிறுவனங்களின் உதவிகளோ, நிவாரணங்களோ உருவாக்கிவிடமுடியாது. நல்ல குடும்பத்தாலும் சமூகத்தாலுமே உருவாக்கமுடியும். இதற்கு இந்தியாவின் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட அப்துல் சலாம் அவர்கள் நல்ல எடுத்துக் காட்டாகும். சாதாரண வறிய குடும்பத்தில் பிறந்தாலும் குடும்ப சமூக உருவாக்கமும் அவரது விடாமுயற்சியும் இன்று இந்திய தேசத்தின் ஜனாதிபதியாக உருவாக்கியது. எம்பிரதேசத்திலும் துன்பம் துயரத்தின் மத்தியில் நல்ல குடும்பமும் சமூகமும் நல்ல தலைவர்களை உருவாக்க சிறுபராயங்களில் இருந்தே முயற்சிக்க வேண்டும். இதனை

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

# கல்வி என்பது பாடவிதானத்துடன் அடங்கிவிடுமா?

- சென்.ஜோன்ஸ் கல்லூரி அதிபர்

யுத்தத்தின் விளைவால் யாழ். மாவட்டத்தின் கல்வி நிலை வீழ்ச்சியடைந்துள்ளது எனப் பலரும் பல கோணங்களில் இருந்து தெரிவிக்கின்றார்கள். அதற்கு ஆதாரமாக க.பொ.த.(சாதாரணதர), (உயர்தர) பரீட்சைப் பெறுபேறுகளும், பல்கலைக்கழக அனுமதித் தரவுகளும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இங்கு நாங்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயம் கல்வி என்பது பாடவிதானத்திற்குள் அமைந்த கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளோடும், பரீட்சைப் பெறுபேறுகளோடும் மட்டும் நின்றுவிடாது அதற்கப்பால் ஒழுக்கம், பண்பாடு, கலை, விளையாட்டு, சேவை போன்ற பல துறைகளையும் உள்ளடக்குகின்றது என்பதாகும்.

இவ்வாறாக ஒரு முழுமைக் கல்வியை வழங்கி வருவதில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் புகழ் பெற்றவை. விளையாட்டுத்துறையில் தேசிய ரீதியில் முதன்மை பெற்ற பல வீரர்களை யாழ். மாவட்டப் பாடசாலைகள் உருவாக்கியுள்ளன. (ஊம்) ஆசிய விளையாட்டுக்களில் நாட்டிற்கு முதற் தங்கப் பதக்கம் பெற்றுக் கொடுத்தவர் நாகலிங்கம் எதிர்வீரசிங்கம். பாடசாலை மாணவனாக இருக்கும் காலத்திலேயே கிளிபோட் அன்ரனிப்பிள்ளை இலங்கை உதைபந்தாட்ட அணியில் அங்கம் வகித்தார்.

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவு
THELIVU - YOUTHS OF JAFFNA ARCHSEACONERY CHURCH OF CEYLON

# தெளிவுரை

ஆற்றலும் சக்தியும் பலமாக எண்ணி
ஆன்மீகத்தில் பற்றுறுதியை இழக்கும் போது
மனிதனை மனிதன் மதிக்காது
மனித மாண்பையே இழந்து விடுகின்றான்
சமாதானத்தை தேடும் மனிதனிடம்
மனித உறவுகள் பகைமை வளர
மிருக உணர்வுகளே மிஞ்சி நிற்கின்றது ஏன்?
உலக அரங்கில் ஆயுத விற்பனை
மனித உயிருக்கு மதிப்பற்றதாக்கி விட
ஆயுத குவியலின் அடிமையாகிய நாடுகள்
ஆன்மீக தேடலில் அருகிச் செல்கின்றது
இதற்கு யார் காரணம்?
எங்கே போகிறோம் என்ற சிந்தனைக்கு
பதில் ஏது?
குடும்பம் தேடும் மகிழ்ச்சி ஏது?
வழிகாட்டிகள் சொல்லும் வார்த்தைகள் எவை?
முன்மாதிரியான வாழ்வுகள்தான் எவை?
தவறுகளையே சொல்லி தப்பிப் போர் யார்?
உன்னில் தவறை களைய முடியாது
மற்றவர் தவறை சுட்டும் வார்த்தைகள்
எத்தனை
தன்தவறுகளை மறைக்க போடும்
முகமூடிகள் தான் எத்தனை, எத்தனை?
இதற்குள் சமாதானத்தை தேடுகிறோம்
சுற்றுலாக்களும், கருத்தரங்குகளும்,
சந்திப்புகளும் கலந்துரையாடல்களும்
சமாதானத் தூதாகி பவனிவர
ஆன்மீகத்தில் தேட விளைவோர்
எத்தனை பேர்?
சமாதானம் பகைவரிடத்திலும்,
முரண்பட்டவரிடத்திலும்
புரிந்துணர்வு அற்றோருடையதும் தானா?
உம்மில் சமாதானம் உண்டா?
உமது குடும்பத்தில், சூழலில் கண்டோமா?
உம் உறவில் மட்டும் உறவாட விளைதையா?
பகைவர் எத்தனை பேரை
ஏற்றுக் கொள்வாய்
சமாதானம் மேடைப் பேச்சிலும்
சுற்றுலா பயணத்திலும் மட்டும்
காணமுடியுமா?
ஆலயத்தில் புகுமுன் உன் பகைவரிடம்
அன்பு செலுத்தி வா என்ற வார்த்தை கண்டு
செயல் வடிவம் கொடுப்போமா?

"நீங்கள் உங்கள் காணிக்கையைப் பலிபீடத்தில் செலுத்த வரும்பொழுது உங்கள் சகோதரர் சகோதரிகள் எவருக்கும் உங்கள்மேல் ஏதோ மனத்தாங்கல் உண்டென அங்கே நினைவுற்றால், அங்கேயே பலி பீடத்தின் முன் உங்கள் காணிக்கையை வைத்துவிட்டுப் போய் முதலில் அவரிடம் நல்லுறவு ஏற்படுத்திக் கொள்ளுங்கள். பின்பு வந்து உங்கள் காணிக்கையைச் செலுத்துங்கள்" மத் 5:23-24 என்ற வார்த்தைகளுக்கு அர்த்தம் கொடுப்போமா?

பாவ மன்னிப்பு கேட்க தயங்கும் நாம்
பாவத்தை செய்ய தயங்கிடுவோமா?
சமாதானத்தின் வித்துக்கள் ஏது?
ஒருவர் மற்றவருக்காய் வாழ்வது
குரல் கொடுப்பது, அவரை ஏற்றுக் கொள்வது
சமாதானத்தின் வித்தாக
தினம் தினம் ஏதாவது செய்து
பகைமையை தூரத்துவோம்,
புரிந்துணர்வுடன் மனித மாண்பை வளர்க்க
நாம் சமாதானத்தின் கருவியாவோம்.
தெளிவு பிறந்து ஓராண்டு
தெளிவுடன் உறவு கொண்டு
உதவும் கரங்களாய் எழுந்தாலும்
பகிர்வாலும் ஊக்கம் தந்த
படைப்பாளர்கள், வாசகர்கள்
பங்களிப்பாளர்கள் யாவர்க்கும்
எம் இதய நன்றிகளைக் குவிக்கின்றோம்
உங்கள் தெளிவு வளர
உங்கள் உச்சாக
ஊக்குவிப்புக்கள் மேலும்
வளர உதவும் கரங்கள்
கைகோர்த்து வாழ்த்துகிறோம்.

(ஆர்)

ஆக்கங்கள் எழுதுங்கள் தெளிவு கண்டு பிரசுரிப்போம்.

தெளிவு
யாழ்.குருமுதல்வர் காரியாலயம்,
452, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

விலை ரூ. 5/=

# தெளிவின் இரகசியம்

சகோ. செ. தொபியாஸ் C.M.S.F
நமுனுகுல - பதுளை

சமகால உலக நிகழ்ச்சிகளைப் பற்றி ஆழ்ந்து சிந்திப்போமானால் ஒரு உண்மை தெளிவாகும். எத்தனை அமைதி, எவ்வளவு ஓய்வு தெளிவான வார்த்தை களும், தியாக தியான பலத்தால் ஏற்படும். தெளிவாக தெரிந்து கொண்ட மகிழ்ச்சியின் மனோபலம் உண்டாகும். கஸ்ரத்தில் மகிழ்ச்சியையும், கஸ்ரமில்லாத சூழ்நிலையில் துன்பப்படுவதும் உண்டு. இச்சமகால சூழ்நிலையில் பல சாதனைகளில் தெளிவின் புதிய சாதனை என்னவென்றால் கிறிஸ்தவம் என்ற சமய வட்டத்துள் இல்லாது கிறிஸ்தவம் சமூதாயத்தில் அதன் விழுமியங்கள் வாழப்படுவதை எடுத்துக்காட்ட இத் 'தெளிவு' ஒரு தெளிவாக்கும் ஊடகமாகும் என்பது வெள்ளிடைமலை.

"எப்பொருள் யார் யார்
வாய் கேட்பினும்
எப்பொருள் எத்தன்மை
யதாயினும்
அப்பொருள் மெய்ப்பொருள்
காண்பதறிவு" (வள்ளுவர்)

எனவேதான் இக்கால தேவை அறிந்து 2ம் வத்திக்கான் பொதுச்சங்கம் "காலத்தின் தேவையை அறிந்து நற்செய்தியின் ஒளியில் அவற்றின் பொருளை எல்லாக் கால கட்டங்களிலும் விளக்கி உரைப்பது திருச்சபையின் கடமை" (இ.உ.தி. எண் 4) என்றுணர்த்தியுள்ளது.

ஒரு தேவையை வெளிப்படுத்துவதன் மூலம் குழந்தை, பெற்றோரிடம் நெருங்கிச் செல்கிறது. உறவை வலுவாக்கிக் கொள்கிறது. தேவைகள் குழந்தையைப் பெற்றோரிடம் இணைப்பது போல் எம்மீட்பர் இயேசு கிறிஸ்து தனது குருத்துவச் செபத்தில் "தந்தாய், நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாய் இருக்கும்படி மன்றாடுகின்றேன்" (யோவான் 17:21). அந்த நிலையில் உறுதியோடு இருக்க தூயஆவியைப் பொழிந்து நாம் அனைவரும் அவரின் ஆலயமாகவும் உள்ளோம் என்பதை புனித பவுல் தெளிவுபடுத்தியுள்ளார். (1 கொரி 3:15-17, 1 கொரி 6:19) இத்தெளிவான சிந்தனையுடன் தந்தைக் கடவுளையும் அவர் மகனையும் அன்பு செய்து அவர் அன்புக் கட்டளையை கடைப்பிடித்து மக்களையும் அன்பு செய்கின்றோம் என்பது தெளிவாக வேண்டும்.

(1 யோவான் 5:1-2) புனித பவுல் கொரிந்து வாழ் மக்களுக்கு (1 கொரி 3:1-3). கிறிஸ்தவ வாழ்க்கையில் குழந்தைகள் போலவும் உங்களைப் பாவித்துப் பேச வேண்டியுள்ள தாயிற்று......" என்கின்றார். எனவே எமது வாழ்வில் ஒரு தேடல் கொண்டு நாம் வாழவேண்டிய அவசியம் தெளிவாகின்றது. "தேடல் உள்ள உயிர்களுக்கே தினமும் பசியெடுக்கும்,

தேடல் என்பது உள்ளவரை வாழ்வில் ருசியிருக்கும்" (கவிஞர்) வேதாகமத்தில் திருப்பாடல் ஆசிரியர் பாடுவது போல் "கலைமான்கள் நீரோடைகளுக்காக ஏங்கித் தவிப்பதுபோல் என் நெஞ்சம் கடவுள்மீது உயிருள்ள இறைவன்மீது தாகம் (தேடல்) கொண்டுள்ளது. (தி.பா.41:1) எம்வாழ்வில் இவ்வார்த்தை தெளிவடையும் போது "கேளுங்கள் பெற்றுக் கொள்வீர்கள் (மத் 7:7-8) நான் உங்களிடம் உருவகமாய்ப் பேசினேன். இதோ நேரம் வருகிறது. அப்போது தந்தை பற்றி தெளிவாய் எடுத்துச் சொல்வேன். கேளுங்கள் பெற்றுக் கொள்வீர்கள். அப்போது உங்கள் மகிழ்ச்சி நிறைவு பெறும்" என்றார் கிறிஸ்து.(யோவான் 17:24-25)

ஒருநாள் ஒரு முனிவர் ஒரு குளக்கரையில் உட்கார்ந்து இருப்பதைக் கண்ட இளைஞன் "ஐயா எனக்குக் கடவுளைக் காட்டும்" என்று கேட்டான். அதற்கு முனிவர் அவ்விளைஞனிடம் குளத்தில் உன்முகம் தெரிகின்றதா என்று கேட்க அவன் 'தெரிகிறது' என்றான். பின்னர் ஒரு குச்சியால் அதைக் கலக்கிய பின்னர் தெரிகின்றதா என்று கேட்க இல்லை மங்கலாகவுள்ளது என்றான். அதற்கு அந்த முனிவர் உனக்குக் கடவுள் முகம் தெரியாது என்றார். ஏன் என்று கேட்க உனது மனம் கலங்கியுள்ளது. உள்ளம் பல கவலைகள் குழப்பத்தால் இருப்பதால் உனது முகம் தெரியவில்லை. எனவே கடவுள் முகமும் தெளிவாக உன்னால் பார்க்கமுடியாது என்றார். அப்படியே 'என் வீட்டுக் கண்ணாடி என்முகத்தைக் காட்டவில்லை' என்பதுபோல் எம் வாழ்வில் தெளிவு கொடுக்க முடியும். இத்தெளிவு பறைசாற்றப்பட வேண்டும். "ஆகையால், உங்களுக்குப் பிறர் என்னென்ன செய்யவேண்டும் என்று விரும்புகிறீர்களோ, அவற்றை யெல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். இறைவாக்குகளும், திருச் சட்டமும் இதுவே" (மத் 7:12).

# ஏதாவது செய்

ஊரழிஞ்சு உறவழிஞ்சு
சிறப்பழிஞ்சு சீரழிஞ்சு
மீழ்குடியாய் வந்தவரும்
ஏதுமில்லை எனஏங்குகிறார்

ஊர்சுற்றி வந்தவரோ
ஊரழிவை பார்த்தபின்னும்
சமாதான சுற்றுலா என
பாவம் பரிதாபம்சொல்லி
அனுதாபம் பகர்ந்தவரும்
ஊர்சுற்றி சென்றிடுவார்

அழிப்பதாலும் அழிவதாலும்
அழிந்திடுமோ எம்மினம்சொல்
நாமிருந்து ஏதுசெய்தோம்
கூடிஅழுது புலம்புவதால்
மீண்டிடுமோ எம் வாழ்வு?
பாவம்பரிதாபம் சென்னால்
தலையில்லா தென்னைகளும்
தளைத்திடுமா தலைகளெல்லாம்
பக்கதுணைக்கு ஏதுசெய்வார்
பிள்ளைகள் நாட்டுவாரோ
பஞ்சத்தை போக்கு வாரோ
தொல்லைகள் தீர்வதற்கு
சுற்றுலாக்கள் பயன்தருமோ
நீதான் ஏதாவதுசெய்
இனமழியா பலமுடனே
வளம்பெருக ஏதாவதுசெய்
இன்றே ஏதாவதுசெய்.

- செயோன் -

# கடுகுக் கதை
# பார்வை

— யோகா —

அங்கு நகர வீதி நிறைந்த சனக்கூட்டம், சுற்றி குவிந்து நின்று வேடிக்கை பார்த்து தமது சிந்தனைக்கு ஏற்றதாக கதைத்துக் கொண்டு நின்றனர்.

"கூட்டமாய் போனால் இந்த வாகனங்கள் நெரிசலில் தப்ப முடியுமோ சொன்னாலும் கேக் காதுகள்" என்றார் முதியவர்.

"இவர் முந்தி எப்பிடி சுத்தி திரிந்தாரோ" என்று கிண்டல் அடித்தனர் இளைஞர்கள்.

"சமாதான பாதை திறப்புக்கு பிறகு சனம் சனமாய் வருகுது. தெருக் கடைகளால் விலத்த முடியுதுமில்லை, இதுக்க பெடி பெட்டையளின்ர சைக்கிள் ஓட்டம் ஒருபுறம், இப்ப பாரன், இடிச்சுப் போட்டு ஓடிற்று வாகனம். முதலில அந்த பெடிய கொண்டு போய் மருந்து கட்ட ஆளில்ல விடுப்பு பாக்குதுகள் பாரன்" என்றார் மூதாட்டி.

"அட அட இதுல இருந்தா சிக்கல் வரும், மாஸ்டரும் வாறார். வா மாறுவம்" மாணவர் கூட்டம் கூடி கலைந்தது.

"பொலிசு வருகுது சாட்சிக்கு ஒருவராது வாருங்க" ஒரு குரல் ஒலித்தது.

அப்போ வீதி வெறிச்சோடிக் கிடந்தது. நின்ற கூட்டத்தை காணவில்லை. சைக்கிளில வந்த வீதி வியாபாரி ஒருவர் விபத்தில் கிடந்தவரை சைக்கிளில் ஏற்றி வைத்தியசாலை கொண்டு சென்றார்.

விபத்தைக் கேட்டு வந்த தாயார் வைத்தியசாலைக்கு சென்றதை அறிந்து அங்கு விரைந்து ஓடினாள்.

பொலிசார் விசாரித்துச் சென்றனர். எவரும் சாட்சி பகர முன் வரவில்லை.

**(இதற்கு பொருத்தமான நற்செய்தி வாசகம் ஒன்று எழுதுங்கள். முடிந்தால் இக்கதையை தொட ருங்கள் அடுத்த இதழுக்கு.)**

# குரலற்ற மக்களின் குரலாக மாறுங்கள்

- வண.கலாநிதி ஜெயசிறி பீரிஸ் -

திருச்சபைகளாக எமது பற்றுறுதிகளை நாம் அறிக்கையிடும்போது ஒரே புனித அப்போஸ்தலிக்க கத்தோலிக்க திருச்சபையை நம்புகிறோம் என அறிக்கையிடுகின்றோம். கி.பி. 4ம் நூற்றாண்டில் எழுந்த ஓர் உறுதி கோட்பாடாக அமைந்தாலும் கிறிஸ்துவின் போதனையின் திரட்டாகவும் காணப்படுகிறது. இதனை நாம் அறிக்கையிட்டு வந்தாலும் எந்தளவுக்கு நாம் திருச்சபைகளில் ஒன்றிணைந்து பணியாற்றுகின்றோம் என்பது கேள்விக்குறியாகவே காணப்படுகின்றது என்றார்.

இவ்வாறு மருதனாமட ஆச்சிரமத்தில் 17-07-2002 அன்று நடைபெற்ற உடுவில் மகாநாட்டில் யாழ். குரு முதல்வர் வண. பிதா. S.P.நேசகுமார் அடிகளார் தலைமையில் நடைபெற்ற போது பிலிமத்தலாவை இறையியல் கல்லூரி விரிவுரையாளர் வண. கலாநிதி ஜெயசிறி பீறிஸ் அடிகளார் உரையாற்றினார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் ஒரு மனித குலமாக வாழ அழைக்கப்படுகின்றோம். இன்று கணப்படுகின்ற சபைகள் பொதுவாக இவ்வுலகில் மக்கள் வாழும் போது எதிர்நோக்கும் நாளாந்த பிணக்குகளுக்கு எவ்வாறு தீர்வு காணலாம் என்பதை மறுத்து உலக வாழ்வுக்கு அப்பால் உள்ள வாழ்க்கையை குறித்து கவனிப் பதை அவதானிக்கின்றோம். ஆயினும் யோவான் 1:14ல் வார்த்தை மனுவுருவானார் என்று ஆசிரியர் கூறுகின்றார். இதிலிருந்து வார்த்தையான இயேசு மனிதரில் ஒருவராக இணைந்து, அவர்களின் நாளாந்த போராட்டத்தில் தன்னையும் இணைத்து பிறருடன் பகிர்ந்து கொண்டார் இது அன்பு, செயல், இந்த அன்புக்கு புதிய பரிணாமத்தை கொடுக்கும் வகையில் ஆதித் திருச்சபை மக்கள் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன் இப்பண்புக்கு சான்று பகர்ந்ததாக ரோம வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றார்கள்.

நேர்தன் சோல்டஸ் வ்பிறம் என்பவரின் கூற்றுக்கு ஏற்ப கோட்பாடுகள் எம்மை பிரித்து நிற்கின்றன. ஆனால் சேவை எம்மை இணைத்து இருக்கின்றன. இதனடிப்படையில் பிரதான திருச்சபைகளை பிரித்து நிற்கின்ற கோட்பாடுகளை களைந் தெறிந்து சேவையை முன்னெடுத்து மனித குலத்தின் நன்மைக்காக ஒன்றி ணையவே அழைக்கப்படுகின்றோம்.

அடுத்து ஆசிய ஆபிரிக்க நாடுகளுக்கு மேலைத்தேய ஐரோப்பிய நாடுகள் வழங்கப் பட்ட பரிசுப் பொருளாக இன்று எம்மிடையே காணப்படும் பிளவுபட்ட சபைகளை கூறலாம். சபைகள் ஆரம்பத்தில் பல்வேறு நோக்கங்களுக்காக பிளவுபடுத்தப்பட்டாலும் பின்னர் இறையியல் காரணங்களை சுட்டி நியாயம் கூறியதைக் காணலாம். எனினும் 1934ம் ஆண்டு ஆவணி 17ம் திகதி கண்டி திரித்துவக் கல்லூரியில் திருச்சபை ஐக்கியத்திற்காக ஒழுங்குபடுத்தப்பட்ட மாநாடு இன்றுவரை அதன் ஐக்கிய யாத்திரையில் தோல்வியைத் தான் கண்டுள்ளது.

திருச்சபைகளும் கிறிஸ்தவ மக்களும் இன்று உலகில் தாம் இருக்கின் றோம் என்பதை மறந்து உலகியல் தேவைகளை மறந்து தங்களை இன்னொரு உலகில் வாழும் பிரஜைகள் என்று கருதிக் கொள் கின்றனர்.

இன்று எமது நாட்டில் நடக்கும் அரசியல் பிரச்சினைகளில் கிறிஸ்தவர்களின் பணி என்ன திருச்சபை தனித்தனியே இதில் ஈடுபடுவதிலும் பார்க்க ஒன்றாக இணைந்து ஏகோபித்த குரலில் தமது கருத்துக்களை வெளியிடலாம்.

குரலற்ற மக்களுடன் தங்களை அடையாளப் படுத்த அழைக்கின றோம். இன்று எமது வறுமை, சமத்துவமற்ற நிலை, சிறுவர் துஷ்பிரயோகம், பாலியல் வன்முறை, பெண் ஒடுக்கு முறை, கட்டாய வேலை வாங்கல், தமது நிலையை வெளிக்கொணர முடியாத நிலையினோர் போன்ற மக்கள் மட்டில் திருச்சபை ஆற்றுகின்ற பணி என்ன என கேட்க அழைக்கப்படுகின்றோம் என்றார்.

# ஐக்கிய உறவுக்கு... (1ம் பக்கத் தொடர்ச்சி)

மத்தியில் கொழும்பு பேராலய கல்விக்கழக விரிவுரையாளர் வண. பிதா. சிற்னி நைற் அடிகளார் உரையாற்றினார்.

மேலும் அவர் உரையாற்றுகையில் 1938ல் தாம்பரத்தில் நடைபெற்ற I.M.C மாநாட்டில் ஆரம்ப உரையை நடாத்தி நற்செய்தி பரப்ப வேண்டியதன் அவசியத்தை உணர்த்தினார். 1948ல் ஸ்தாபிக்கப்பட்ட W.C.C ல் தலைமையுரையாற்றி அங்கு காணப்பட்ட நற்செய்தி கழகத்தின் தலைவராகவும் ஆனார். 1968ல் உப்சலாவில் நடைபெற்ற மாநாட்டில் பிறமதங்களுடன் நாங்கள் வைத்திருக்க வேண்டிய உறவு நிலை பற்றி பேசினார். இக்காலப் பகுதியில் ஆரம்பிக் கப்பட்ட C.C.A யின் தலைவராகவும் பணி யாற்றினார்.

உள்நாட்டில் அவரது பங்களிப்பு பற்றி பார்க்கும்போது தன்நாட்டு மயமாக்கல் சிந்தனை உள்ள Rev. Dr.D.T.நைல்ஸ் அடிகள் அதற்கு சான்றாக மருதனார்மட ஆச்சிரமத்தை ஸ்தாபிப்பதில் மூலக்கல்லாக இருந்தார். பின்னர் 1940ல் தேசிய கிறிஸ்தவ சங்கத்தின் தலைவராக பணியாற்றிய காலத்தில் ரோமன் கத்தோலிக்க சபைக்கும் பிரதான சபைகளுக்கிடையிலான உரையாடல், பிறமதங்களுக்கும் பிரதான சபைகளுக்குமிடையிலான உரையாடல் என்று முன்னெடுத்தார். பின்னர் யாழ் மத்திய கல்லூரியின் அதிபராகவும் வடக்கு கிழக்கு சபா சங்க தலைவராகக் கடமையாற்றிய பின்னர் மெதடிஸ்த திருஅவையின் தலைவரானார். வேலூரில் 1971ல் மரணமானார். இவ்வாறு Rev. Dr. D.T.நைல்ஸைப் பற்றி உரையாற்றி முடித்தார்.

# பொறுப்பு

துப்பாக்கிகளே
உங்களிடம் யார்
இந்த இலங்கையைத் தந்தார்கள்?
துப்பாக்கிகளே
பொறுப்பு என்பது
என்ன என்று தெரியுமா?
மனுக்குலத்தை அழிப்பதா பொறுப்பு;
எனவே
துப்பாக்கிகளே
உங்களை மண்வெட்டிகளாக்குங்கள்
உங்களை கலப்பைகளாக்குங்கள்
உங்கள் இயந்திர இதயங்களை
எறிந்துவிட்டு - நல்ல
மனித இதயங்களுடன்
வாழ வாருங்கள்
துப்பாக்கிகளின் ஆளுகைபோதும்
நல்லிதயங்களின் ஆட்சி வேண்டும்
"பொறுப்பு" எங்களை ஆழட்டும்.

வண.S.D.P. செல்வன்

# மனம்

எதை மனம் நேசிக்கின்றதோ
எதை மனம் நாடுகின்றதோ
எதை மனம் விரும்புகின்றதோ
அதுவே மனதுக்கு சாந்தி தரும்
அதுவே மனதுக்கு நிம்மதி தரும்
அதுவே மனதுக்கு நிறைவு தரும்
இதனால்தான்
கடவுள் வசப்பட்டோர்
சமயப்பிரிவு பார்ப்பதில்லை
வாழ்க்கை வசப்பட்டோர்
ஏற்றத்தாழ்வு பார்ப்பதில்லை
அமைதி வசப்பட்டோர்
இனவெறி கொள்வதில்லை.

வண.S.D.P. செல்வன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கையை உணரப்படுத்தி அடையாளப்படுத்துவதே ஆன்மீகத் தேடல்

- வண. யோசுவா இரத்தினம் -

**குருத்துவப் பணியில் 25 வருடங்களைப் பூர்த்தி செய்த வரும், புறக்கோட்டை சகல பரிசுத்தவான்களின் ஆலயத்தின் பங்குத்தந்தையும், அங்கலிக்கன் திருச்சபையின் ஒப்புரவாகுதலுக்கும் - சமாதானத்திற்குமான ஒருங்கிணைப்பாளரும், கலை நுட்பங்களை வழிபாடுகளில் புகுத்தி அருட்பணியாற்றுபவரும், சிறந்த படைப்பாளருமாகிய வண. பிதா. யோசுவா இரத்தினம் அடிகளர் 30 வருடத்தின் பின் யாழ். வருகையின்போது தெளிவுக்குத் தந்த சிறப்புச் செவ்வி.......**

சிறப்புச் செவ்வி

## எண்ணிக்கையைக் கொண்டு ஆன்மீகத்தை அளவிட முடியாது

**? உங்கள் பணி வாழ்வைப் பற்றி தெளிவு வாசகருக்கு கூறமுடியுமா?**

➤ எனது பணிவாழ்வு என்று சொல்லும்போது 25 வருடங்கள் பூர்த்தியாகின்றது. நல்லூர் பரி. யாக்கோபு ஆலயத்தில் அன்று யாழ். குருமுதல்வராக இருந்து பின்நாளில் ஆயராக பணிபுரிந்து இறைவனடி சேர்ந்த அதி. வண. ஞானப்பிரகாசம் ஆண்டகையுடன் எனது பணி வாழ்வு ஆரம்பமானது.

நான் இலங்கையின் பல பாகங்களிலும் குறிப்பாக கிழக்கு மாகாணம், வடமாகாணம், இன்னும் மத்திய பகுதி, மலையகப் பகுதி போன்ற இடங்களிலும் குருவாக பணியாற்றியிருக்கின்றேன். அத்துடன் எனது குருத்துவப் பணிபோக, இளைஞர்களுடன் அதிக ஈடுபாடு கொண்டு அவர்களின் உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அவர்களின் முன்னேற்றத்திற்காக உழைத்திருக்கின்றேன்.

கலைப் பணியும் எனது பணிகளில் சிறப்பம்சமான பணியாக அமைந்திருக்கின்றது. தற்போது சமூகப் பணியாக சமாதானத்திற்கும் ஒப்புரவாதலுக்குமான ஒருங்கிணைப்பாளராகவும் கடமையாற்றுகின்றேன்.

**? உங்கள் அனுபவத்தில் ஆன்மீக தேடல் எம்மக்கள் மட்டில் என்ன நிலையை அடைந்துள்ளது? இவை இன்றைய வாழ்வில் மேலும் வளர்ச்சி பெற நீங்கள் கூறும் ஆலோசனைகள் எவை?**

➤ ஆன்மீகத் தேடல் என்று சொல்லும்போது மக்கள் ஆலயத்திற்கு வருகின்றார்களா? இறைவனை வணங்குகின்றார்களா? திருச்சபை வளர்ச்சி பெற்றிருக்கின்றதா? இளைஞர்களின் எண்ணிக்கை ஆலயத்தில் கூடி இருக்கின்றதா? இது போன்ற அளவீடுகளை வைத்துக் கொண்டு நாங்கள் ஆன்மீக தேடலை அளவிட முடியாது. ஆன்மீகத் தேடல் என்பது உண்மையிலே ஒரு பரந்த விடயம் ஆன்மீக தேடல் இல்லாமல் ஒரு மனிதனும் இவ்வுலகில் இல்லை. இருக்கவும் முடியாது என்பதுதான் என் கணிப்பு.

ஆன்மீக தேடல் ஒவ்வொரு மனிதனிடமும் நடந்து கொண்டுதான் இருக்கின்றது. ஆனால் அதன் வடிவங்கள் வரையறுக்கப்பட்டவையாக இருக்கின்றது. ஆலயத்திற்கு வராத ஒருவர் கூட ஆன்மீகத் தேடலில் ஈடுபட்டிருக்கலாம். கடவுள்மீது நம்பிக்கை இல்லை என்று சொல்லுகிறவனுக்கும் ஏதோ ஒரு விதமான ஆன்மீக உணர்வு நிலை இருக்கின்றது. ஆன்மீகம் என்பது ஒருவரின் வாழ்க்கையின் அர்த்தத்திற்கான ஒரு தேடல். **வாழ்க்கையை உணரப்படுத்தி அடையாளப்படுத்துவதே ஆன்மீகத் தேடல்......**

எனவே அந்தத் தேடல் இன்று எங்கும் இருக்கின்றது. மக்கள் ஆலயத்தில் மட்டுமல்ல அவர்களுடைய வாழ்க்கை நிலைகளிலும், சமூக நிலைகளிலும், அவர்கள் காண் கின்ற எங்கும் ஆன்மீகத் தேடல் இருக்கின்றது. அப்படிப்பட்ட ஆன்மீகத் தேடல்களை இனம் கண்டு அதன் வளர்ச்சிக்கு நாங்கள் உதவி செய்ய கூடியவர்களாக இருக்க வேண்டும்.

எனவே ஆன்மீகத் தேடல் மூலம் வளர வேண்டும் என்றால், ஆன்மீகம் வேறு வாழ்க்கை வேறு என்ற பிரிவுகளை ஏற்படுத்தாமல் வாழ்க்கையுடனும், வாழ்க்கை பிரச்சினைகளுடன் ஆன்மீகம் இரண்டறக் கலத்தல் வேண்டும். அவ்வாறு பிரித்துப் பார்த்தால் அது ஒரு நோயுள்ள ஆன்மீகம் என்றுதான் சொல்ல வேண்டும். இன்று நாங்கள் எதிலும் ஆன்மீகப் பார்வை பார்க்கக்கூடிய தன்மையை வளர்க்க வேண்டும். இன்று பல அறிஞர்கள் சொல்லுவார்கள். திருச்சபையின் இடத்தை, குருவானவரின் இடத்தை, ஆலய பலிபீடத்தை தொலைக்காட்சி சாதனங்களும், தொழில்நுட்பவியல்களும் கைப்பற்றிவிட்டது என்ற கருத்துக்கள் உண்மையாக இருப்பினும், அந்த தொலைக் காட்சிக்கூடாக ஆன்மீகத்தை வளர்க்க கூடிய ஆக்கபூர்வமான காட்சிகளை ஊக்குவிக்க வேண்டும். தொலைக்காட்சி மட்டுமல்ல விளையாட்டு, நாடகம், தொழில் நிலை, எதுவாக இருந்தாலும், அதிலே ஆன்மீக பார்வை பார்ப்பதற்கு ஆன்மீக தேடலை முன்னெடுப்பதற்கு சில நிகழ்ச்சிகளை அறிமுகப்படுத்த வேண்டும்.

பொதுக்காரியங்கள் மூலம் எவ்வாறு ஆன்மீகத்தை பார்க்கலாம் என்று பயிற்சிகளை கொடுத்தல் போன்ற முறைகளை மேற்கொள்ளலாம்.

**? வழிபாட்டு முறைமையில் உங்கள் கலை வடிவங்கள் மிகவும் பயன்பட்டதை பலரும் கூறுவார்கள்? அவை பற்றி விபரித்து கூற முடியுமா?**

➤ வழிபாட்டு முறைகளில் பல பரீட்சார்த்தங்களை செய்து பார்த்த ஒருவன் என்ற வகையில் அதை எப்படி வழிபாடுகளிலே புகுத்தியிருக்கின்றேன் என்று சொல்வதாக இருந்தால் எமது கலாச்சாரத்தில் இருந்து பல இசை வடிவங்களை எமது வழிபாட்டுக் குள்ளே அறிமுகப் படுத்துவதிலே எப்போதும் நான் முன்னின்று உழைத்திருக்கின்றேன்.

கலை வடிவங்களை வழிபாட்டுக்குள்ளே இணைத்தல் என்பது சில இசைக்கருவிகளை அதாவது நாதஸ்வரம், தவில் போன்ற கருவிகளை கூட எமது வழிபாட்டிற்குள்ளே கொண்டு வருகின்ற முதல் முயற்சிகளை நான் எடுத்திருக்கின்றேன், இன்னமும் சொல்லப்போனால் பரதம் போன்ற நடனக் கலையையும் கூட வழிபாட்டுக்குள்ளே அறிமுகப்படுத் துகின்ற சந்தர்ப்பங்களையும் கையாண்டிருக்கின்றேன். அதாவது நற்செய்தி வாசகம் வாசிக்கின்றபோது நடனத்துடன் அந்த பவனியைக் கொண்டு சென்று அவர்கள் அபிநயத்துடன் இருக்க நற்செய்தி வாசித்தலும், அதனைவிட நற்செய்தி வாசிக்கப்படுகின்றபோது அதற்கேற்ற அபிநயத்தை வெளிபபாடுகள் மூலம் வெளிக் கொண்டு வருகின்ற முறைகளை கையாண்டிருக்கின்றேன்.

இவை மட்டுமல்ல இன்னும் நாடக வடிவங்கள் ஊடாகவும், உரையாடல் ரீதியான மறையுரைகளையும், மௌனத்தின் நடிப்பு மூலம் நற்செய்தியை வெளிபபடுத்தல் போன்ற முறைகளையும் நான் கையாண்டிருக்கின்றேன்.

**? ஆன்மீக பணிகளில் இசை, நாடகம், எழுத்து, கலை வடிவங்களால் மெருகூட்ட இன்றைய காலத்தின் முயற்சிகள் திருப்தி தருகிறதா? இவற்றை வளர்க்க என்ன வழிகளை கையாளலாம்?**

➤ கலை வடிவங்களை ஆன்மீக வளர்ச்சிக்கு திருப்தியை தருகின்றதா என்கின்றபோது அந்த வடிவங்களை வெளிப்படுத்துகின்ற தன்மை குறைவாகவே காணப்படுகின்றது. அவற்றை உரிய முறையில், உரிய அளவு, தகுந்த முறையில் நாங்கள் பாவிப்பது இல்லை. இதனால் கணிசமான பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய அளவுக்கு பாவிப்பது இல்லை.

எனினும் அப்படி பாவிக்கப் படுகின்ற வடிவங்கள் தூறல்கள் போல இருந்துவிட்டு எங்கோ ஒரு மூலைகளில் எப்போதாவது ஒரு முறை நடைபெறுகின்றதாகவும், பலனற்றதாகவும் இருப்பது ஒரு பெரும் குறையாகும். ஆகவே ஒருங்கிணைந்த முறையில் தரமாக நடைபெறவில்லை.

இதற்கு காரணம் அந்த கலை வடிவங்களை ஒருங்கிணைந்து செய்தவற்கு எந்தவிதமான களமும் இல்லை, அல்லது எந்தவிதமான அமைப்பும் இல்லை. அத்துடன் தகுந்த வழிகாட்டிகள் இல்லாமையும் ஆகும். நாம் தெரிந்து கொண்ட கலை வடிவங்களை பிறருக்கு கற்றுக் கொடுக்காது தமக்குள்ளே அடக்கி வைத்திருத்தலும், தட்டிக் கொடுத்து வளர்க்காததும் தான் காரணம் என்பேன்.

எனவே இந்த கலை வடிவங்களை முன்னேற்றுவதற்கு கலைஞர்களின் ஒன்று சேர்ந்த முயற்சி முக்கியமானது. அதாவது சிதறி இருக்கின்ற கலைஞர்களையும்,புதிய கலைஞர்களையும் இனம் கண்டும், அவர்களை வளர்க்க குழுவாக சேர்தலும், அதாவது சிற்றலையாக இருப்பது பேரலையாக மாற வேண்டும் என்றால் அது வெற்றியளிக்கும். இது சம்மந்தமாக ஒருமுகப்படுத்திய சிந்தனையுடன் செயற்படுகின்ற ஒரு அமைப்பு அல்லது களம் தேவை.

**? உங்கள் பணிக் காலத்தில் நீங்கள் எதிர்பார்த்த இலக்கினை அடைந்துள்ளீர்களா? அதன் அறுவடையாக எதனை கூறுவீர்கள்?**

➤ பணியிலே இலக்கு அந்த இலக்கிலே வெற்றி என்பது ஒரு கடினமான கேள்வி. ஏனெனில் இலக்கு, வெற்றி என்று நாங்கள் சொல்லும் மொழி ஒரு உலக மொழி என்பதுதான் எனது எண்ணம். ஏனென்றால் நாங்கள் மனித ரீதியாக சிந்தித்த சில இலக்குகள் எங்களுக்காக இறைவனின் இலக்காக இல்லாமல் இருக்கலாம். ஆகவே சில சந்தர்ப் பங்களில் நான் எதிர்பார்த்த இலக்குகளை எனது பணிவாழ்வில் அடைந்திருக்கின்றேனா? என்றால், அதில் அடையாமல் போன சந்தர்ப்பங்கள் தான் அதிகம் உண்டு.

அறுவடை என்ற விடயத்தை எடுக்கும்போது நான் எப்போதும் நம்புகின்றேன். நாங்கள் எதிர் பார்க்கின்ற இலக்குகள், கனவுகள் நனவாகாமல் போயிருந்தாலும் இறைவன் எங்களுக்கு கொடுக்கின்ற பணியை, அதாவது இறைவன் தருகின்ற பாத்தியில் நாங்கள் எதை விதைக்கின்றோமோ அதையே இறைவன் அறுவடை செய்வான். அந்த அறுவடை சில வேளை கண்ணுக்குத் தெரியாத அறுவடையாக சில சமயம் உடனடியாக இல்லாவிட்டாலும் காலம் தாழ்த்தி வருகின்ற அறுவடையாக இருக்கின்றது. இப்பேற்பட்ட அனுபவத்தைப் பெற்றிருக்கின்றேன்.

**? அன்மீகத் தெளிவுபெற தெளிவு வாசகர்களுக்கு நீங்கள் கூறும் செய்தி என்ன?**

➤ ஆன்மீகம் என்பது உலகம் என்கின்ற பட்டறையில் தான் உருவாக வேண்டும். ஆகவே ஆன்மீகம் தெளிவு பெறுவதற்கு சிந்தனை, வாசிப்பு, தேடல் முக்கியமானது. ஒரு பேரறிஞன் சொன்னதுபோல "ஒரு கையில் திருமறையும், மறு கையில் தினசரிப் பத்திரிகையும் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட ஒருவர்தான் பூரண ஆன்மீகத்தை வளர்க்கமுடியும்" என்று.

ஆகவே ஆன்மீகத் தெளிவு என்பது வெறுமனே திருமறையை மட்டுமோ, இன்னும் எத்தனையோ திருமறை விளக்கவுரை நூல்களை வாசிப்பதனாலோ, தியான ரீதியான நூல்களை வாசிப்பதனாலோ மட்டும் போதாது. மாறாக சிந்தனை ரீதியான எழுதுகின்ற எழுத்துக்களை வாழ்வோடு இணைப்பதனாலே எமது ஆன்மீகம் வளர்கின்றது.

ஆன்மீகத்தில் ஒவ்வொரு வருக்கும் ஒவ்வொரு பரப்பு இருக்கின்றது. அந்த பரப்பு குறுகியதாக இருக்கலாம். பரந்த விரிசலாக இருக்கலாம் ஆன்மீகத்தை விசாலப்படுத்துவதாக, அல்லது ஆழப்படுத்துவதாக இருந்தால் சிந்தனை, உலகப் பிரச்சினைகளையும், யதார்த்தத்தை பிரதிபலிக்கின்ற தேடல் தேவை.

எனவே இப்படிப்பட்ட காரியத்தை முன்வைக் கின்ற தெளிவு போன்ற உங்கள் பத்திரிகை ஒருவரின் ஆன்மீக வளர்ச்சிக்கு மிகவும் உதவும் என்று நான் நினைக்கின்றேன். எனவே மக்கள் இப்பத்திரிகைக்கு ஆதரவு கொடுக்க வேண் டும். அவர்கள் வீடுகளில் திருமறையோடு சம்மந்தப்படுத்திய நூல் மட்டுமல்லாது உலகத்தோடு பொருந்தி யதார்த்தத்தை பிரதி பலிக்கின்ற அன்மீகத்தை வளர்க்கக்கூடிய சஞ்சிகைகள், பத்திரிகைகள் இருக்க வேண்டும். அதனை விரும்பி படிக்க வேண்டும். இவ்வாறு தூர நோக்குடன் செயற்பட்டால் தான் ஆன்மீகத்தில் நல்ல தெளிவு கிடைக்கும் என்பது எனது நம்பிக்கை.

## ஊடுருச் செய்தி

### பண்டாரவளையில் இளைஞர் பாசறை

இலங்கை வாலிபர் இயக்கத்தினால் ஆவணி 21 - 25ம் திகதி வரை பண்டாரவளை சென். தோமஸ் கல்லூரியில் வதிவிட பாசறை நடைபெற இருக்கின்றது. இப்பாசறையில் நீண்ட காலத்தின் பின்பு வடக்கில் இருந்து வாலிபர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள். இவர்கள் 21-08-2002 அன்று பயணிக்க இருக்கின்றார்கள்.

### ➤ பயிற்சிப் பாசறை

2002 ஆவணி மாதம் 21 - 25ம் திகதிகளில் ஓய்வு நாள் பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சி பாசறை கொழும்பு மறை மாவட்டத்தினரால் நடாத்தப்படவிருக்கின்றது.

### ➤ ஞான ஒடுக்கம்

கொழும்பு மறைமாவட்ட திருப்பணியாளர்களுக்கான ஞான ஒடுக்கம் யூலை 1 - 5ம் திகதி வரை புத்தளத்தில் நடைபெற்றது. இதில் இங்கிலாந்தைச் சேர்ந்த வண. கலாநிதி கனன் அன்கேற் அடிகளார் நடாத்தினார்.

### விசேட கூட்டம்

கொழும்பு மறைமாவட்டத்தில் யூலை 24ம் திகதி புதிய யாப்பு தொடர்பாக விசேட பொதுக்கூட்டம் நடைபெற்றது. இது ஆயர் அதிவண. டுலிப். டி. சிக்கேரா ஆண்டகையின் தலைமையில் நடைபெற்றது.

### ➤ வறுமை ஒழிப்புக்கான மாநாடு

யூன் 25,26களில் வறுமை ஒழிப்பு தொடர்பாக மாநாடு குருநாகலையில் நடைபெற்றது. இதற்கு வண. கலாநிதி ஜெயசிறி பீரிஸ் அடிகளின் தலைமையில் நடைபெற்றது.




## கல்வி என்பது பாட... (1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் இன்று அந்த நிலை மாறியுள்ளது. எமது ஒழுக்கம், பண்பாடு, என்பன கோஷ்டிச் சண்டைகள், சமூக விரோதச் செயல்கள் காரணமாக சமூக ஒழுங்கமைப்பை மாற்றியமைத்துள்ளன.

"பாடசாலைகள் திறக்கப் பட்டால் சிறைச்சாலைகள் மூடப்படும்" என்பா கல்வியலாளர். ஆனால் இன்று யாழ்ப்பாணத்தில் பல பாடசாலைகள் மூடப்பட்டிருக்கும் நிலையையும், சிறைச் சாலைகள் திறக்கப்படும் நிலையையுமே காணக்கூடியதாக இருக்கின்றது. பெற்றோர்களே! கல்வியில் வீழ்ச்சி என்பது வெறும் பரீட்சை முடிவுகளிலிருந்து பெறப்படும் ஒன்றல்ல. பிள்ளைகளின் முழுமையான வளர்ச்சியில் ஏற்படும் வீழ்ச்சி என்பதை நீங்கள் மனதிற் கொள்ள வேண்டும். யாழ்ப்பாணத்தில் கடின உழைப்பினாலும், கல்வியினாலும் புகழ்பெற்றவர்கள் பலர் என்பதை அறிவீர்கள். இந்த நிலை மீண்டும் மலர வேண்டுமாயின் நாட்டில் அமைதி பிறக்க வேண்டும். சமாதானம் நிலைக்க வேண்டும்.

நாட்டில் சமாதான அலை வீசிக் கொண்டிருக்கின்ற இந்த வேளையில் தேசிய, சர்வதேசிய ரீதியில் அதற்கு முக்கியத்துவமும், அழுத்தமும் கொடுக்கப்பட்டு பிரச்சாரங்களும் மேற்கொள்ளப படுகின்றன. அதே வேளை இம் முயற்சி வெற்றி பெறுமா? என்ற சந்தேகங்களும் எழத்தான் செய்கின்றன. எனினும் சமாதான முயற்சி வெற்றிபெற வேண்டும். தங்கள் பிள்ளைகள் தடையின்றி கல்வியைத் தொடர வேண்டும் என்ற பாரிய எதிர்பார்ப்பை பெற்றோர் கொண்டிருக்கிறார்கள். மக்களைப் பொறுத்தமட்டில் சமாதானம் என்பது வெறும் பேச்சாக மட்டுமன்றி அவர்களது மூச்சாகக் காணப்படுகின்றது என்பதை சகலரும் நன்கு அறிய வேண்டும். ஆகவே எவ்வித தடையையும் தாண்டி சமாதானம் நிலைநாட்டப்படுவது அவசியம். அதுவே இன்றைய முதல் தேவையும் ஆகும்.

இவ்வாறு 20.07.2002 அன்று யாழ் சென்.ஜோன்ஸ் கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழாவில் அதிபர் எஸ்.தனபாலன் அவர்கள் தனதுரையில் தெரிவித்தார்

## விடுதலை பெற நாம்... (1ம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலையும் - அடிமைகளுக்கு விடுதலையும் - காணியற்ற மக்களுக்கு காணி உரித்து முதலியவற்றை உரிமையாளர் வழங்குவார்கள். இப்பேற்பட்ட சுதந்திரத்தை பெற்றுக் கொள் வதற்காக அக்காலம் வரும்வரை காத்திருக்கும் சூழ்நிலை ஏற்பட்டது என்றார்.

இவ்வாறு 21-07-2002 அன்று கோப்பாய் புனித மரியாள் ஆலயத்தின் 150 வருட நிறைவு ஆராதனையில் புதிதாக திடப் படுத்தல் கொடுத்து, சபை மக்களுக்கு ஆற்றிய மறையுரையின்போது கொழும்பு மறைமாவட்ட ஆயர் அதி. வண. டுலிப்.டி. சிக்கேரா ஆண்டகை கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மக்களைப் பார்த்து இப்பேற்பட்ட பணிகளை நீங்கள் செய்வதற்கு யூபிலி வருடம் வரை காத்திராமல் இன்றே யூபிலி வருடம், இன்றே அப்பணியை ஆற்றுங்கள் என மக்களுக்கு சவால் விடுத்தார்.

இது போன்று எம் மக்களுக்கு நாங்கள் எவ்வாறு வாழ்வழிக்கப் போகின்றோம்? அன்று யேசுவின் சீடர்களும் இப்படியாகத்தான் கேட்டார்கள். இவ்வனாந்தரமான இடத்தில் இவர்களுக்கு நாம் எவ்வாறு உணவழிப்பது என்று வினா எழுப்பினார்கள். இயேசு பிரதியுத்தமாக நீங்களே இவர்களுக்கு உணவழியுங்கள். உங்களிடம் காணப்படும் வளங்களையும் பயன்படுத்தி உணவழியுங்கள்.

அதே கருத்தைத்தான் நான் உங்களிடம் முன் வைக்கின்றேன். எங்களிடம் இருக்கின்ற ஆற்றல்களை, வலுமைகளை, வளங்களைப் பயன்படுத்தி துயருற்ற மக்களின் துயர்துடைப்பவர்களாக எப்போதும் இருக்க வேண்டும்.

ஒடுக்கப்பட்டு துயரும் மக்கள் நாம், துயரும் வேதனைப்படும் இன்னொரு மனிதனுக்கு விடுதலை வழங்க என்னிடம் எத்தகைய ஆற்றல் உள்ளது என்று காண அழைக்கப்படுகின்றோம். அவ்வாறு நாம் காணும் நாளில் இன்னொரு மனிதனுக்கு யூபிலி ஆண்டு பிறக்கும், அன்றுதான் அவனுக்கு ஆண்டவர் அருள்தரும் ஆண்டு பிறக்கும். எனவே இங்குள்ள மக்களுக்கு யூபிலி காலத்தையும் ஆண்டவர் அருள்தரும் ஆண்டையும் அறிவிப்பது எமது கடமை ஆகும் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"உங்கள் பகைவரையும் அன்பு கூறுங்கள்" மத்.6:44**

# கோப்பாய் பரி.கன்னி மரியாள் ஆலயம்

## வரலாற்றுப் பாதையிலே

**150வது வருடங்களை ஆன்மீக பணியில் நிறைவு செய்யும் கோப்பாய் புனித. கன்னி மரியாள் ஆலயத்தின வரலாற்றுச் சுருக்கம வண. J. ஜெப மோகன் அடிகள் இத் தெளிவின் ஊடாக தருகின்றார்.**

**ஆலயப் பணி மேலும் வளர தெளிவின் வாழ்த்துக்கள்**

நல்லூர் பரி. யாக்கோபு ஆலயத்திலிருந்தே 1849ம் ஆண்டு வரை கோப்பாய் ஊழியம் நடைபெற்றது. இக்காலங்களிலே கோப்பாயை சேர்ந்த 7 பேர் நல்லூர் பரி. யாக்கோபு ஆலயத்தில் அங்கத்தவர்களாகவும் இருந்திருக்கிறார்கள்.


1849ம் ஆண்டு கோப்பாயில் ஆலயம் ஒன்று கட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. அத்தீர்மானத்தை நிறைவு செய்ய அப்போதைய அரச அதிபர் P.A.டைக் (Dyke) அவர்கள் 5 ஏக்கர் காணி கொடுத்தார். அந்தக் காணியிலேயே ஆலயமும், மிசன் House கட்டுவதற்கான அடிக்கல்லு 1849ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதலாம் திகதி அதி.வண. Chapman ஆண்டகையினால் நாட்டப்பட்டது. இந்த காலங்களிலே கோப்பாய் நிலைய ஊழியத்திற்கு

வண.J.ஜெபமோகன்,
விரிவுரையாளர், கிறிஸ்தவ நாகரீகத்துறை யாழ். பல்கலைக்கழகம்

பொறுப்பாக வண. றொபேட் பாயிற்ட்டர் (Robert pargiter) பணியாற்றினார்.

கோப்பாய் ஆலய ஆராதனைகள் ஆலயம் கட்டும்வரை நிரந்தரமற்ற கொட்டில்களில் பல இடங்களில் நடைபெற்றது.

1852ம் ஆண்டு ஜனவரி மாதம் 9ம் திகதி கோப்பாய் ஆலயம் மக்கள் வழிபாட்டுக்காக திறந்து வைக்கப்பட்டது. இவ்வாலயம் கட்டிமுடிக்க 400 பவுன்ஸ் முடிந்தது. இந்த பணத்தையெல்லாம்



இலங்கையிலுள்ளவர்களும், இங்கிலாந்து நண்பர்களும், C.M.S மிசனறி ஊழியர்களும் கொடுத்து உதவினார்கள்.

கோப்பாய் புனித மரியாள் ஆலய திறப்புவிழா அன்று கடும்மழை பெய்தபோதும் அனேகர் ஆலய நிகழ்ச்சிக்கு கிராமங்களில் இருந்து வந்து சிறப்பித்தார்கள். அந்நாளில் ஆராதனைகள் காலை 8.45 மணிக்கும், மதியம் 12.30 மணிக்கும், மாலை 6.30 மணிக்கும் நடைபெற்றது.

இத்திறப்பு விழா அன்று ஆராதனையில் மூன்று பேர் வளர்ந்தோர் ஞானஸ்நானம் பெற்றார்கள். நல்லூரில் பணியாற்றிய வண. ஜேம்ஸ் ஓ. நெயில் அடிகள்(Jemes ONeil) "மலைக்குச் சென்று மரம் கொண்டு வாருங்கள்; என் இல்லத்தை மீண்டும் கட்டியெழுப்புங்கள்; அது எனக்கு உகந்ததாய் இருக்கும்; அங்கே நான் மாட்சியுடன் விளங்குவேன்" என்று சொல்கி ன்றார் ஆண்டவர். (ஆகாய் 1:8) இவ்வாசகத்தை அடிப்படையாகக் கொண்டு பிரசங்கம் செய்தார். இவ் வழிபாட்டில் 130 பேர் பரிசுத்த நற்கருணையில் கலந்துகொண்டார்கள்.

வண. ஜேம்ஸ் ஓ நெயில்ஸ் அடிகளும் அவரது மனைவியும் கோப்பாய் பரி. கன்னி மரியாள் ஆலய வழிபாட்டுக்கு தேவையான நற்கருணைப் பாத்திரங்களை சில்வர் பாத்திரங்களாக அன்பளிப்பு செய்தார்கள். அவ்வாலயத்தைச் சேர்ந்த இரண்டு பெண்கள் நற்கருணை மேசையையும் இரண்டு கதிரையையும் அன்பளிப்பாகக் கொடுத்தார்கள்.

திறப்பு விழா அன்று மாலை ஆராதனை ஆங்கிலத்தில் நடைபெற்றது. இவ்வாராதனையை வண. றொபேட் பாஜிட்டர் அடிகள் சங். 38:7-8 வசனங்களை ஆதாரமாகக் கொண்டு பிரசங்கம் செய்தார். இவ்வாராதனைக்கு யாழ்ப்பாணத்தில் வசித்த அநேக ஐரோப்பிய சமூகத்தைச் சோந்தவர்களும் ஒரு வெஸ்லிய (மெதடிஸ்த) மிசனறியும் கலந்து கொண்டார்கள்.

இவ்வாறு புகழ் மிக்க கோப்பாய் பரி. கன்னி மரியாள் ஆலயத்தின் ஆரம்ப காலம் அமைகின்றது. மிசனறியினர் அவ்வாலயத்தின் மூலம் கொண்டிருந்த தூரநோக்கு பார்வை இன்று வரை அதன் ஆன்மீக வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைந்தது. இவ்வாலயம் கடந்த 150 வருடங்களாக எத்தனையோ பணிகளை ஆற்றிவந்தது போல, இனிவரும் காலத்திலும் சிறந்த ஆன்மீக பணியை ஆற்ற இறைவன் அருள்புரிய வேண்டும்.

# வழிகாட்டிகளே விழிப்பாய் இருங்கள்!

- யோசப்பாலா -

யாழ். மறைமாவட்ட மறை ஆசிரியர்களுக்கான பயிற்சி கருத்தரங்கு மறைக்கல்வி இயக்குனர் வண.நேசராஜா அடிகளார் தலைமையில் நடைபெற்றபோது கிறிஸ்தவ விழுமியங்கள் பரவ தொடர்பூடகத்தின் பங்கு, எனும் பொருளில் பயிற்சிகள், வழங்கிய எழுத்தாளர் யோசப்பாலா உரையாற்றுகையில்,

சமூகத்தை வழிகாட்ட வேண்டிய தொடர்பூடகங்களின் தவறான வழிகாட்டலால் சமூகச் சீர்கேடுகளை எதிர்நோக்குகின்ற இக்காலத்தில் விழிப்புடன் சமூகத்தை வழிநடத்த வேண்டியது பொறுப்புமிக்கவர்களின் கடமையாகும். இன்று வழிகாட்டிகளாக மறை அறிவை புகட்டுவதில் ஆலயங்களில் மட்டும் நின்று ஆன்மீகத்தை மக்கள் மத்தியில் விதைத்துவிட முடியாது.

மறை அறிவை பல்வேறு வடிவங்களில் புகட்டுவதில் ஆர்வமாய் செயல்படுங்கள். சிறுவர்கள் மட்டில் உள்ள ஆற்றல் திறமைகளை கிறிஸ்தவ விழுமியங்களுடன் வளர்க்க தொடர்பூடக வழிகளில் அவர்களை இணைத்துக் கொள்ள பத்திரிகை, சஞ்சிகைகள், தொலைக்காட்சிகளை பயன்படுத்துவதில் தரமானவற்றை தேர்ந்து கொள்ள வழிப்படுத்துவதில் ஆன்மீக வழிகாட்டிகளே விழிப்பாய் இருங்கள். வீட்டுக்குள்ளே வந்து விட்டது தொடர்பூடக வழி சீர்கேட்டு வடிவங்கள் இதில் இருந்து விடுபட தரமானவற்றை கிறிஸ்தவ விழுமியங்களைக் கொண்டு தெரிவு செய்யும் உளப்பக்குவத்தை உருவாக்குவதில் உங்கள் தேடல்களும், பங்களிப்பும் மிக அவசியமானது.

எந்த படைபாற்றலிலும் கிறிஸ்தவ விழுமியங்களைக் கொண்டு தெரிவு செய்யும் உளப்பக்குவத்தை உருவாக்குவதில் உங்கள் தேடல்களும், பங்களிப்பும் மிக அவசியமானது.

எந்த படைபாற்றலிலும் கிறிஸ்தவ விழுமியங்கள் பகிரப்படுவதை அறிந்து கொள்ளும் ஆற்றலை வளர்ப்பதோடு புதிய படைப்பாளிகளாக உருவாகி உருவாக்குவதில் மறைபணியாளர்கள் முன்வர வேண்டும் என்றார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் உள்ளதை உள்ளபடி சொல்வதைவிட உள்ளதை உள்ளபடி சொல்லும்வேளை உண்மைகளையும் வெளிப்படுத்த முனையுங்கள். பானையில் இருந்தாலே அகப்பையில் வரும் என்பார்கள் முன்னோர். வழிகாட்டிகளிடமும் தொடர்பூடக தேடலும் முயற்சியும் இன்றைய காலத்தின் தேவைக்கு ஏற்ப படைப்பாற்றலை வளர்த்துக் கொண்டாலேதான் புதிய உருவாக்கங்களை உருவாக்கவும் வழிகாட்டவும் முடியும்.

தவறுகளை கண்டு மனம் குமைவதைவிட சுட்டிக்காட்டி விழிப்பூட்ட வேண்டியது பொறுப்புள்ள வழிகாட்டிகளின் கடமையாகும். கிறிஸ்துவின் வழியில் வழிகாட்ட மறை அறிவை புகட்ட முன்வரும் ஒவ்வொருவரும் அவரது வாழ்வு கற்றுத் தந்தவைகளை விதைப்பதிலும் செயற்படுவதிலும் அர்ப்பணிப்புள்ளோராக மாறினால் தான் சமூக சீர்கேடுகளை களைவதிலும், கிறிஸ்தவ மதிப்பீடுகளை வளர்ப்பதிலும் பங்காளராக முடியும். கிறிஸ்தவ விழுமியங்களை விழிப்பூட்டும் வழிகாட்டிகளே இன்றைய தேவையாகும் என்றார்.

இந்நிகழ்வில் 170க்கு மேற்பட்ட மறைகல்வி ஆசிரியர்கள் பங்கு பற்றினார்கள். இப்பயிற்சி பாசறையில் 10 கையெழுத்து ஏடுகள் தயாரித்து தம் படைப்பாற்றலை வெளிப்படுத்தினார்கள். புதிதாக காலாண்டு சஞ்சிகை வெளியிடவும் தீர்மானித்தார்கள்

## தெளிவுக்கு ஆண்டொன்று

**தெளிவு கண்டு மகிழ்ந்து**
**ஆண்டொன்று மலர்ந்தது**
**ஆண்டவன் பணிசெய்ய**
**ஆதரவுக் கரங்கள் இணைந்து**
**ஆன்மீக தெளிவு பெற**
**வேண்டுகிறோம் இறைவனை - நாம்**
**வாழ்த்துகின்றோம் அன்புடனே.**

*கத்தோலிக்க கலை இலக்கிய வட்டம்*
*யாழ்ப்பாணம்.*



# சிறுவர் முற்றம்



## சவால்களை எதிர்கொள்வீர்களா?

எல்லாச் செயற்பாடுகளையும் வெற்றியாக முடித்தோம் என்று சொல்வதற்கு இவ்வுலகில் யாரும் இல்லை. அந்த வகையில் எமது வாழ்வில் ஏற்படுகின்ற சில தோல்விகளையும், துன்பங்களையும் பெரிதாக எண்ணி, அதனையே பொழுது போக்காக கொண்டிருப்போம் என்றால், நம் வாழ்வின் அர்த்தத்தை உணராதவர்களாக, எதிர்காலத்தை வீணாக்குபவர்களாக இருப்போம்.

"உங்கள் கடந்தகால தோல்விகளையே நீங்கள் எண்ணிக் கொண்டிருந்தால், நிகழ்காலத்தை குறைத்து மதிப்பிட்டு எதிர்காலத்தை வீணாக்கிக் கொண்டு விடுவீர்கள்" என்று அமெரிக்க மனோ தத்துவ நிபுணர் டாக்டர் வால்டர் டோயல் ஸ்டேபிள் என்பவரின் கருத்துக்கு ஏற்ப எமது கடந்தகால தோல்விகளை தினமும் எண்ணி, நிகழ்காலத்தில் தூர நோக்குடன் செயற்படாமல், சுய தேடல் அற்றவர்களாக இருப்போமேயானால், எம் எதிர்காலம் வீணாகி, நல்வாழ்வியலுக்கான அடையாளத்தை இழந்து போகின்றோம்.

"ஐயோ நான் நல்லாய் படிச்சனான் றிசல்ட் படனாய் வந்திட்டுது, படிக்காததுகளுக்கெல்லாம் நல்ல றிசல்ட் வந்திருக்குது"

"என்ர தலையெழுத்து எனக்கு எப்பவும் தோல்விதான் வருகுது"

"அவர் தன்ர மேனை டொக்டருக்கு படிக்கவிட்டுட்டு, என்னை ஆட்ஸ் படிக்கச் சொல்லி அட்வைஸ் சொல்லுறார்"

"எங்கட வீட்டுக்காரர் எனக்கு பேசனல் கிளாசெல்லாம் எடுக்க வைத்திருந்தால் நான் படிச்சு பாஸ் பண்ணியிருப்பன்"

இவ்வாறு தோல்வி வருகின்ற போது ஏற்படுகின்ற மனநிலை பல வடிவங்களில் அமைகின்றது. தோல்வி எண்ணம் ஒருவரில் மேலாதிக்கம் செலுத்துமேயானால்

**மருந்தில்லா மருத்துவம்**
**- ராதி -**

அவரிடம் பயம், கோபம், வெறுப்பு, கசப்பு, கவலை போன்ற உணர்ச்சிகள் அதிகரித்து தம்மீதும் பிறர் மீதும் குறை சொல்லி, தலைவிதியை பழி சுமத்தி, உதவி செய்ய முன்வருவோர் மீதும் சந்தேகம் கொள்வார்கள்.

எனவே எமது வாழ்வில் ஏற்படுகின்ற சம்பவங்களை சம்பவங்களாக மட்டும் பார்க்க கற்றுக்கொள்ள வேண்டும். நிகழ்ந்து முடிந்த இறந்த காலத்திற்குரிய சம்பவத்தை நாம் மாற்றமுடியாது. அது வெற்றியாக இருக்கலாம் தோல்வியாக இருக்கலாம், நடந்தது நடந்ததுதான். ஆனால் அவற்றில் இருந்து நல்ல பாடங்களைக் கற்றுக்கொள்ள முடியும். எமது தவறுகளை உணர்ந்து திருத்திக்கொள்ளவும் முடியும்.

மின்சார பல்பினை எரிய விடுவதற்கு எத்தனையோ வழிகளில் தோற்றுப்போன பிறகுதான் தாமஸ் அல்வா எடிசன் அதை எரிய விடுவதற்கான ஒரு வெற்றி வழியைக் கண்டு பிடித்தார். அவர் தோல்விகள் ஒவ்வொன்றையும் வெற்றியின் படிகள் என்று கருதி தன்னம்பிக்கையுடன் முயன்றார். அதனால் வெற்றி கண்டார்.

தோல்விகள் நேர நேரத்தான் நம்முடைய செயல்முறையை மேலும் எப்படிச் சிறப்பாக்க முடியும் என்று நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. ஆகவே நாம் குறித்த ஒரு இலக்கினை அமைத்து அதனை நோக்கி தன்னம்பிக்கையுடன் வீறு நடைபோட வேண்டும். அப்போது எம்வாழ்வு வெற்றி சிறக்கும். இவ்வாறு இல்லாவிட்டால் நாம் பல உளநோய்களுக்கு உள்ளாகி சீரழிந்து விடுவோம்.

எனவே தோல்விகள் வருகின்ற போது பல நோய்களை நாமே தேடிக் கொள்கின்றோம். இதற்கான மருந்தும் உங்களிடமே உண்டு. சவால்களை எதிர்கொண்டு வெற்றி சிறந்த அறிஞர்களைப்போல சுய முயற்சியால் முன்னேறலாம். இது உங்களால் முடியும்.

**வறுமை நீங்கிடுமா?**

உலக நாடுகளில் தாண்டவமாடிடும்
- வறுமை
நீங்கிடும் நாளென்றோ?

பணம் மட்டும் வறுமை நீக்கும்
சாதனம் - எனப்
பலர் கருதுவர், ஆனால்
பணத்தினோடு பகமை உணர்வை
அகற்றி
பகிர்ந்து அளித்து, பண்பாய் நடந்து
பாரினில் அறியாமைகளை நீக்கி
பாசமொடு வாழ்த்துவோமானால் -
அன்று
பறந்திடும் வறுமை.

- பூங்குழலி -
அரியாலை.

## தெளிவு ஆண்டு மலரில் உங்கள் சிந்தனைக்கு விருந்தாக்க

## குட்டிக்கதைப்போட்டி

ஒரு பக்கத்தில் மட்டும் கிறிஸ்தவ விழுமியங்களை கருவாகக் கொண்டு வெளிவர எழுதுங்கள். தரமானவை பிரசுரித்து பரிசு வழங்கப்படும்

**உங்கள் சிந்தனையில் மலரும் "சித்திர சிந்தனை"கள் பிரசுரத்துக்கு வரைந்து அனுப்புங்கள். தரம் கண்டு பிரசுரிக்கப்படும். ஆண்டு பெயர் எழுதிவிடுங்கள்.**

**சிந்திக்கத்தூண்டும் சமகால புகைப்படங்கள் "கவிதை கலசம" மூலம் கவிதை எழுதத்தூண்ட உங்கள் புகைப்படத் திறமைகளை அனுப்புங்கள்**

**விடா முயற்சியே நல்ல...** (1ம் பக்கத் தொடர்ச்சி..)

இன்றைய பாலர் பாடசாலைகளில் கல்வி பயில செல்கையில் பெற்றோரும் சமூகமும் கொடுக்கின்ற ஆதரவும் பயிற்சிகளும் பாராட்டும் நம்பிக்கை ஊட்டுகின்றன. இவை போன்ற நற்பணிகளில் எம்நிறுவனம் உதவிக்கரமாக இருக்கும் என கைதடி சரஸ்வதி சிறுவர் பாடசாலை விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட வண.ஜெயக்குமார் அடிகள் தெரிவித்தார். சிறப்பு விருந்தினராக உரை யாற்றிய எழுத்தாளர் யோசப்பாலா அவர்கள், சமூகம் தன்னை ஒன்றுபடுத்தி செயல் படுவதால் இன்றைய துன்ப துயரங்களில் இருந்து விடுபடவும் உள ஆற்றுப்படுத்தவும் வழி பிறக்கிறது. தீய சமூக சீர்கேடுகள் களைவதில் விழிப்பாய் இருப்பதில் நல்வழி காட்டிகளாக திகழும் குடும்ப உறவுகள் பலமடைய வேண்டியது இக்காலத்தின் தேவையாகும். இதுவே சிறுவர் மனதில் விதைக்கப்படும் நல்ல முன்மாதிரியான ஊக்குவிப்பாகும் என்றார்.

**உறவை மேம்படுத்துவதே...** (1ம் பக்கத் தொடர்ச்சி..)

1962ல் ஆரம்பிக்கப்பட்ட 2ம் வத்திக்கான் சங்க கூட்டத்தில் தங்களிடம் இருந்து பிரிந்துபோன சபைகளிடமும் உண்மையுள்ளது. அவர்களும் இறைவனின் பிள்ளைகள் என்ற உணர்வு தோன்றி இதுவரை காலமும் அவர்களை மறந்த நாம் அவர்களுடன் புதிய உறவை ஆரம்பிப்போம் என்றும் வரலாற்றில் நாம் செய்த பிழைகளுக்கு நாம் மன்னிப்பு கூறுவோம் என்ற நிலை உருவானது என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org